
# பாவத்தை நீங்கள் எந்த உருவிலும் கண்டால், உடனே அதிலிருந்து குதித்து விலகியோடுங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

14. அதைக் குறித்து நான் எண்ணிப்பார்க்கையில்; இதைக் குறித்து நான் எண்ணிப் பார்த்தேன். **அதாவது மரணம் ஜீவனுடன் சம்பந்தப்பட்டதல்ல. ஜீவனும் மரணமும் ஒரே நேரத்தில் இருக்க முடியாது**. மரத்திலுள்ள இலைகள் செத்துப் போவதற்கு முன்பு, அதன் சத்து அதை விட்டு வெளியேற வேண்டும். எனவே, மரணமானது எதனுடன் சம்பந்தப்பட்டுள்ளதென்றால் - நான் மானிடர்களைக் குறித்து பேசுகிறேன் - **மரணம் பாவத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது**. **ஏனெனில் நமக்கு பாவம் எதுவும் இருந்ததற்கு முன்பு, மரணம் இருக்கவேயில்லை**. ஆனால் மரணம் எங்குள்ளதோ, அங்கு பாவம் உள்ளது; பாவம் எங்குள்ளதோ, அங்கு மரணம் உள்ளது; **ஏனெனில் பாவத்தின் பலனே மரணம்.**

15. அதன் பிறகு, அவன்... பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே. 18:20). ஆனால் **நாம்**

**தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்கும்போது, நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டு, மரணத்துடன் எந்த விதத்திலும் சம்பந்தப்படாதவர்களாயிருக்கிறோம்**. பாருங்கள்? **மரணம் ஜீவனுடன் சம்பந்தப்பட முடியாது. ஜீவனும் மரணத்துடன் சம்பந்தப்பட முடியாது.**

16. நேற்று சில வாலிப கிறிஸ்தவர்கள் கூடியிருந்த அறையில் நான் பேசிக் கொண்டிருந்த போது, "நீங்கள் சாலையில் நின்று கொண்டிருந்த போது, ஒரு கார் மணிக்கு தொண்ணூறு மைல் வேகத்தில் கட்டுக்கு மீறி சாலையில் வந்து கொண்டிருக்குமானால், நீங்கள் உங்களால் முடிந்த வரையில் மிகவும் வேகமாக அந்த நெடுஞ்சாலையை விட்டு விலகி விடுவீர்கள். அந்த காரின் வழியிலிருந்து விலகிக் கொள்ள, நீங்கள் குதித்து, வழுக்கி, எது வேண்டுமானாலும் செய்வீர்கள்" என்றேன். அந்த விதமாகத் தான் பாவமும் ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டும், **ஏனெனில் பாவம் மரணத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது**. **பாவத்தை நீங்கள் எந்த உருவிலும் கண்டால், உடனே**

**அதிலிருந்து குதித்து விலகியோடுங்கள்.** நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குக் கவலையில்லை, **பொல்லாப்பின் தோற்றத்திலிருந்து விலகுங்கள். ஏனெனில் பாவத்துடன் சம்பந்தப்படுதல் மரணத்தை விளைவிக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது அங்கு நின்று கொண்டு, உங்களை நோக்கி வரும் கார் உங்கள் மேல் மோத விட்டுக் கொடுப்பது போல் உள்ளது.**

17. **நீங்கள், அது என்ன செய்யும் பார்க்கலாம் என்று காத்திராதேயுங்கள்; அதன் வழியிலிருந்து விலகி விடுங்கள். தீமையின் தோற்றத்தைக் கண்டால், அதை விரைவில் புறக்கணித்து விடுங்கள். சோதனை வருவதை நீங்கள் காணும்போது, பாவம்... அது தவறான ஒன்றாக இருக்குமானால், மரணம் உங்கள் பின்னால் பதுங்கியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.** பாருங்கள்? **அப்படியானால், மணிக்கு தொண்ணூறு மைல் வேகத்தில் உங்களை நோக்கி வரும் மோட்டார் வாகனத்திலிருந்து எவ்வளவு விரைவாக தப்பி ஓடுவீர்களோ, அவ்வளவு விரைவாக இதையும்**

விட்டு ஓடிவிடுங்கள். நீங்கள் மோட்டார் வாகனத்தின் வழியிலிருந்து விரைவில் விலகிக் கொள்ள விரும்புவீர்கள். நீங்கள் குதித்து, வழுக்கி, எப்படியும் ஓடித் தப்பித்துக் கொள்வீர்கள்.

18. நமக்கு ஜீவன் உள்ளதென்று நாம் எப்படி அறிந்து கொள்கிறோமென்றால், நாம் பாவத்தை வெறுக்கும் காரணத்தாலே. நாம் பாவத்தை மிகவும் அதிகமாக வெறுக்கிறோம், அதனுடன் மரணம் சம்பந்தப்பட்டுள்ளதென்று நாம் அறிந்திருக்கிறோம், அது தோன்றும்போது, நாம் உடனே அதை புறக்கணிக்கிறோம். நாம் அதிலிருந்து எந்த வகையிலும் விலகியோட, நாம் குதிக்கிறோம், ஓடுகிறோம், பாவத்திலிருந்து விலகியிருக்க நாம் எதையும் செய்கிறோம், ஏனெனில் பாவத்தில் மரணம் உள்ளது. நாம் பாவத்துடன் தொடர்பு கொண்டிருக்க நிச்சயமாக விரும்புவதில்லை. அதிலிருந்து விலகியிருக்கவே விரும்புகிறோம்

19. எனவே அது ஒரு நல்ல சிறு கருத்தாய் இருக்குமென்று எண்ணினேன். நேற்று அந்த கிறிஸ்தவர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்த போது, இக்கருத்து எனக்கு தோன்றினது; அதை இந்த சபைக்கு இன்று காலை எடுத்துரைப்பது நலமென்று எண்ணினேன் - முக்கியமாக இங்கு அமர்ந்துள்ள வாலிபப் பிள்ளைகளுக்கு இத்தகைய சோதனை நேரிடுகையில்.

20. பிறகு, இதனுடன் சம்பந்தப்பட்டுள்ள ஒரு கேள்வி கேட்கப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். அதை மட்டும் இப்பொழுது பார்க்க நேர்ந்தால்... இதை ஞாபகம் கொள்ளுங்கள், **பாவமுள்ள எதிலுமே மரணம் படுத்துக்கிடக்கிறது. நீங்கள் பாவத்தில் பங்கு கொள்வீர்களானால், மரணத்தில் பங்கு கொள்கிறீர்கள். எனவே அதிலிருந்து விலகியிருங்கள்.**

*செய்தி:* 61-10-15M கேள்விகளும் பதில்களும் COD #14, *அக்டோபர் 15, 1961 காலை*

★★★★★